**ஆகஸ்ட் - 05**

# TNPSC துளிகள்

- ஆந்திரப் பிரதேச மாநில முதல்வரான Y.S. ஜெகன் மோகன் ரெட்டி அவர்கள் ரக்சா பந்தன் கொண்டாட்டத்தின் போது இணையவழிப் பாதுகாப்பு குறித்த ஒரு நிகழ்நேரப் பயிற்சித் திட்டமான “இ-ரக்சா பந்தன்” என்ற ஒன்றைத் தொடங்கி வைத்துள்ளார்.

# தேசியச் செய்திகள்

## பாரத் காற்றிழை சேவைகள்

- இது இந்திய அரசினால் தொடங்கப்பட்ட டிஜிட்டல் இந்தியா முன்னெடுப்புகளின் ஒரு பகுதியாக பிஎஸ்என்எல் நிறுவனத்தால் தொடங்கப்பட்டுள்ளது.
- இது பிஎஸ்என்எல் அமைவிட மையத்திலிருந்து 20 கிலோ மீட்டர் தொலைவு வரம்பில் கம்பியில்லாத் தந்தி வழியிலான இணைப்பை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## சீன மொழி

- தேசியக் கல்விக் கொள்கையானது பள்ளிகளில் நடத்தப்பட இருக்கும் தனது அயல்நாட்டு மொழிகளின் உதாரணப் பட்டியலில் இருந்து மாண்ட்ரீன் அல்லது சீன மொழியை விலக்கியுள்ளது.
- உயர் தரத்திலான இந்திய மொழிகள் மற்றும் ஆங்கிலத்துடன் சேர்த்து கொரிய மொழி, ஜப்பானிய மொழி, தாய், பிரெஞ்சு, ஜெர்மன், ஸ்பானிஷ், போர்ச்சுக்கல் மொழி, ரஷ்ய மொழி ஆகிய அயல்நாட்டு மொழிகள் இடைநிலைக் கல்வி நிலையில் கற்பிக்கப்பட உள்ளன.

## 100வது நினைவு தினம் - திலகர்

- லோக்மான்ய பால கங்காதர திலகரின் 100வது நினைவு தினம் ஆகஸ்ட் 01 அன்று அனுசரிக்கப் பட்டது.
- இவர் லால்-பால்-பால் (லாலா லஜ்பத் ராய், பாலகங்காதர திலகர், பிபின் சந்திர பால்) என்ற மூன்று நபர்களில் ஒருவராவார்.
- இவர் ஆங்கிலேய ஆட்சியாளர்களால் “இந்திய அமைதியின்மையின் தந்தை” என்றழைக்கப் படுகின்றார்.
- ஜவஹர்லால் நேரு இவரை “இந்தியப் புரட்சியின் தந்தை” என்று அழைக்கின்றார்.

- மகாத்மா காந்தி இவரை "நவீன இந்தியாவை உருவாக்குபவர்" என்று கூறியுள்ளார்.
- இவர் "பூர்ண சுயராஜ்ஜியம்" அல்லது "முழுமையான தன்னாட்சி" என்ற கருத்தின் வலுவான ஆதரவாளராக விளங்கினார்.
- இவரது புகழ்பெற்ற முழக்கம் "சுயராஜ்ஜியம் எனது பிறப்புரிமை, அதை நான் அடைந்தே தீருவேன்" என்பதாகும்.

## ஸ்மார்ட் இந்தியா ஹேக்கத்தான் (SIH) 2020

- இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி 2020 ஆம் ஆண்டின் ஸ்மார்ட் இந்தியா ஹேக்கத்தானின் (SIH - Smart India Hackathon) இறுதிச் சுற்றில் பங்கு பெற்ற பங்கேற்பாளர்களுடன் காணொளி வாயிலாக உரையாற்றினார்.
- இந்த SIH ஆனது இந்திய அரசின் மத்திய மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சகம், அகில இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம், பெர்சிஸ்டன்ட் அமைப்பு மற்றும் i4C ஆகியவற்றினால் இணைந்து நடத்தப்பட்டது.
- SIH ஆனது நமது அன்றாட வாழ்வில் எதிர்கொள்ளும் சில சிக்கலான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு வேண்டி மாணவர்களுக்கு ஒரு தளத்தை வழங்குவதற்காக ஏற்படுத்தப்பட்ட தேசிய அளவிலான ஒரு முன்னெடுப்பாகும்.
- இது ஒரு கருத்துரு குறித்த புத்தாக்கக் கலாச்சாரம் குறித்து கற்பிப்பதையும் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான மனநிலையை வளர்ப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- SIHன் முதலாவது பதிப்பானது 2017 ஆம் ஆண்டில் நடத்தப்பட்டது-




## வித்யார்த்தி விக்யான் மன்தன்

- மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை அமைச்சரான டாக்டர் ஹர்ஷ வர்தன் வித்யார்த்தி விக்யான் மன்தன் என்ற ஒன்றைத் தொடங்கி வைத்துள்ளார்.
- இது ஆறாம் வகுப்பு முதல் 11 ஆம் வகுப்பு வரை பயிலும் பள்ளி மாணவர்களிடையே உண்மையான அறிவியலைப் பிரபலப்படுத்துவதற்காக வேண்டித் தொடங்கப்பட்ட தேசிய அளவிலான ஒரு திட்டமாகும்.
- இது டிஜிட்டல் சாதனங்களைப் பயன்படுத்தும் வகையில் புது தில்லிக்கான

இந்தியாவின் ஒரு மிகப்பெரிய அறிவியல் திறன்சார் ஆராய்ச்சித் தேர்வாகும்.

- இது இந்திய அரசின் விக்யான் பிரசார் மற்றும் தேசியக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக் கழகத்துடன் இணைந்து விஜ்னானா பாரதி (VIBHA - Vijnana Bharathi) என்பதின் ஒரு முன்னெடுப்பாகும்.
- VIBHA என்பது பள்ளி மாணவர்கள் மற்றும் பொது மக்களிடையே அறிவியல் தொழில்நுட்பத்தைப் பரப்புவதற்காகவும் பிரபலப்படுத்துவதற்காகவும் வேண்டி தொடங்கப்பட்ட ஒரு தேசிய இயக்கமாகும்.


## பிரதீப் ஷா குழு

- மத்திய சர்வதேச நிதியியல் சேவைகள் ஆணையமானது பிரதீப் ஷா தலைமையிலான ஒரு வல்லுநர் குழுவை ஏற்படுத்தியுள்ளதாக அறிவித்துள்ளது.
- இது சர்வதேச நிதியியல் சேவைகள் மையத்தில் சர்வதேச சில்லறை வணிகத்தை எவ்வாறு மேம்படுத்துவது என்பது குறித்து பரிந்துரைப்பதற்காகப் பணியாற்றுகின்றது.

# சர்வதேசச் செய்திகள்

## கூர்க்கா படை வீரர்கள் குறித்த 1947 ஆம் ஆண்டு ஒப்பந்தம்

- சமீபத்தில் நேபாள நாட்டு வெளியுறவுத் துறை அமைச்சர் கூர்க்கா படை வீரர்களின் இராணுவச் சேவை குறித்த இந்தியா, நேபாளம் மற்றும் ஐக்கிய இராஜ்ஜியம் ஆகியவற்றுக்கிடையேயான 1947 ஆம் ஆண்டு ஒப்பந்தமானது தேவையற்றது என்று கூறியுள்ளார்.
- 1814-16 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட ஆங்கிலேய-நேபாளப் போரைத் தொடர்ந்து, ஆங்கிலேய அரசானது 1815 ஆம் ஆண்டில் கூர்க்கா படை வீரர்களைப் பணியில் சேர்க்க முடிவு செய்தது.
- 1947 ஆம் ஆண்டில் இந்தியாவின் விடுதலைக்குப் பின்பு, கூர்க்கா படை வீரர்கள் குறித்த விவகாரமானது ஆங்கிலேய-இந்தியா-நேபாளம் ஆகியோருக்கிடையேயான முத்தரப்பு ஒப்பந்தத்தின் மூலம் தீர்த்து வைக்கப் பட்டது.
- தற்பொழுது கூர்க்காக்கள் ஆங்கிலேய இராணுவத்தில் 3% ஆக உள்ளனர். இவர்கள் அங்கு 2015 ஆம் ஆண்டு தமது 200 ஆண்டு காலச் சேவையை நிறைவு செய்துள்ளனர்.



# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## நாசா விண்வெளி வீரர்கள்

- பாப் பென்கென் மற்றும் டவுக் ஹர்லே ஆகிய இரண்டு அமெரிக்க விண்வெளி வீரர்கள் சர்வதேச விண்வெளி நிலையத்திலிருந்து 21 மணி நேர பயணத்தைத் தொடர்ந்து பூமிக்கு வெற்றிகரமாகத் திரும்பியுள்ளனர்.
- இந்த விண்வெளி வீரர்கள் அமெரிக்காவின் புளோரிடாவில் உள்ள நாசாவின் கென்னடி விமான நிலையத்திலிருந்து எலோன் மஸ்கின் நிறுவனமான ஸ்பேஸ்-எக்ஸ் நிறுவனத்துடன் இணைந்து நாசாவினால் விண்ணிற்குச் செலுத்தப் பட்டனர்.
- இந்த வெற்றிகரமான தரையிறக்கத்தின் மூலம் எலோன் மஸ்க்கின் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனமானது இந்த வெற்றியைப் பெற்ற முதலாவது தனியார் நிறுவனமாக உருவெடுத்துள்ளது.

## மஞ்சள் காய்ச்சல்

- மஞ்சள் காய்ச்சல் ஆனது ஏடிஸ் எஜிப்தி கொசுக்களின் மூலம் பரவக் கூடிய வைரஸின் மூலம் ஏற்படும் ஒரு காய்ச்சலாகும்.
- ஒரு புதிய ஆய்வின்படி, இந்த நோயானது 2050 ஆம் ஆண்டிற்குள் மேற்கு ஆப்பிரிக்காவிலிருந்து மத்திய மற்றும் கிழக்கு ஆப்பிரிக்காவிற்கு மாறும் என்று கணிக்கப் பட்டுள்ளது.
- இது துணை நிலை சகாரா ஆப்பிரிக்கப் பகுதியில் 34 நாடுகளில் பரவிக் காணப் படுகின்றது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## செந்நாய் (Dhole)

- அருகிவரும் செந்நாயைப் பாதுகாப்பது குறித்த ஒரு ஆய்வுக் கட்டுரையானது

"பாலூட்டி ஆராய்ச்சி இதழில்" வெளியிடப்பட்டுள்ளது.

- செந்நாய் ஆனது ஆசிய வன நாய், இந்திய வன நாய், சத்தமிடும் நாய், சிவப்பு நாய் மற்றும் மலை ஓநாய் என்றும் அழைக்கப் படுகின்றது.
- புலியைத் தவிர பன்னாட்டு இயற்கைப் பாதுகாப்பு மன்றத்தின் "அருகிவரும்" இனங்களின் பட்டியலில் இடம்பிடித்து இருக்கும் இந்தியாவில் உள்ள ஒரே மிகப்பெரிய ஊனுண்ணி செந்நாய் ஆகும்.
- உலகில் அதிக எண்ணிக்கையிலான செந்நாய்களை இந்தியா கொண்டுள்ளது.
- இந்தியாவில் அருகிவரும் செந்நாயைப் பாதுகாப்பதில் கர்நாடகா, மகாராஷ்டிரா மற்றும் மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்கள் முன்னிலையில் உள்ளன.



# மாநிலச் செய்திகள்

## இந்திரா ரசோய் யோஜனா

- ராஜஸ்தான் மாநில அரசானது இந்திரா ரசோய் யோஜனா என்ற திட்டத்தைத் தொடங்கத் திட்டமிட்டுள்ளது.
- இதன் குறிக்கோள் "பட்டினியில்லை தூக்கமில்லை" என்பதாகும்.
- இந்தத் திட்டமானது சென்னையின் "அம்மா கீ ராசோய்" (அம்மா உணவகம்) என்பதனால் ஊக்கம் அளிக்கப் பட்டு, தொடங்கப் பட்டுள்ளது.

# விளையாட்டுச் செய்திகள்

## லீவிஸ் ஹாமில்டன்

- பார்முலா ஒன் சாம்பியனான மெர்சிடஸ் அணியின் லீவிஸ் ஹாமில்டன் என்பவர் ஐக்கிய இராஜ்ஜியத்தின் சில்வர் ஸ்டோனில் உள்ள சில்வர் ஸ்டோன் சுற்றில்

நடைபெற்ற பிரிட்டிஷ் கிராண்ட் பிரிக்ஸ் (GP - Grand Prix) 2020 (பார்முலா ஒன் பிர்ரெலி பிரிட்டீஷ் கிராண்ட் பிரிக்ஸ் - 2020 என்ற அதிகாரப் பூர்வமாக அழைக்கப்படும்) என்பதை வென்றுள்ளார்.

- இவர் இந்தப் பட்டத்தைப் பெறுவது தற்பொழுது 7வது முறையாகும்.
- பிரிட்டீஷ் GPயில் அதிக அளவில் வெற்றி பெறும் ஒரே கார் பந்தய வீரர் இவராவார்.

# முக்கிய தினங்கள்

## உலக சமஸ்கிருத தினம் - ஆகஸ்ட் 03

- இந்திய அரசானது 1969 ஆம் ஆண்டில் ஷர்வண பூர்ணிமா தினத்தன்று உலக சமஸ்கிருத தினத்தை அனுசரிக்க முடிவு செய்தது.
- அகில இந்திய வானொலியானது இந்தத் தினத்தன்று தனது முதலாவது சிறப்பு நிகழ்ச்சியான "பகுஜன் பாஷா-சமஸ்கிருத பாஷா" என்ற ஒரு நிகழ்ச்சியை ஒலிபரப்பியது.
- 2020 ஆம் ஆண்டின் தேசியக் கல்விக் கொள்கையானது பள்ளி மற்றும் உயர் நிலைக் கல்வி அளவில் சமஸ்கிருத மொழியை ஊக்கப்படுத்தும் பன்மொழித்துவத்தை நோக்கமாகக் கொண்டுள்ளது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★